செ.வெ.எண்.54 நாள்.21.11.2017.

திருநெல்வேலி மாவட்ட மைய நூலகத்தில் நடைபெற்ற 50வது தேசிய நூலகவார நிறைவு விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, சமூக ஆர்வாலர்களை பாராட்டி, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் கேடயங்களை வழங்கினார்.

--------

திருநெல்வேலி மாவட்டத்தில் மாவட்ட மைய நூலகம் மற்றும் வாசகர் வட்டத்தின் சார்பில் நடைபெற்ற 50வது தேசிய நூலகவார நிறைவு விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, சமூக ஆர்வாலர்களை பாராட்டி, நூலக வார விழா தொடர்பாக நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் கேடயங்களை வழங்கினார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது

திருநெல்வேலி மாவட்ட மைய நூலுகம், வாசகர் வட்டம் சார்பில் 50வது தேசிய நூலக வார விழா இம்மாதம் 14ம் தொடங்கப்பட்டு 20ம் தேதி வரை நடைபெற்றது. தேசிய நூலக வார விழா கொண்டாடுவது குறித்து மாணவ, மாணவியர்கள் அறிந்து கொள்ள வேண்டும். மாணவ, மாணவிகள் கைபேசி இணையதளம் மூலம் பயன்பாடு அதிகரித்துள்ள நிலையில் நூலகத்தின் முக்கியம் குறித்து யாரும் அறிந்திருப்பதில்லை. உதாரணமாக ஒரு பள்ளியில் ஓட்டுநராக பணிபுரிந்த ஒரு நபர் பள்ளி வேலை நேரங்களை தவிர மற்ற நேரங்களில் நூலகங்களில் உள்ள அறிவாற்றல் உள்ள புத்தகங்களை படித்து, குடிமைதேர்வில் தேர்ச்சி பெற்று, இன்று அவர் இந்திய காவல் பணியில் சேர்ந்து, உயர் அதிகாரியாக பணியாற்றி வருகிறார். நூலகம் வாசிப்பதன் மூலம் அன்றட நிகழ்வுகளை அறிய முடியும். மாணவ, மாணவிகள் தங்களது இலக்கை எய்திட முடியும். குழந்தைகளை வீட்டில் புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தினை பெற்றோர்கள் ஊக்குவிக்க வேண்டும். பள்ளிகளில் செயல்படும் நூலகத்திற்கு சென்று புத்தகங்களை கட்டாயம் வாசிக்க வேண்டும். தினமும் அரை மணி நேரத்திற்கு குறையாமல் புத்தகம், கட்டுரைகள், நாளிதழ்கள் மற்றும் அறிவுசார்ந்த நூலகங்களை வாசித்திட வேண்டும். தினமும் வாசிப்பதினால் மூளை சுறுசுறுப்பாக இயங்க வழிவகை செய்யப்படும். பள்ளி மற்றும் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவிகள் தங்கள் பயிலும் கல்வி நிறுவனங்களில் உள்ள நூலகங்களுக்கு சென்று, நூலகங்களில் உள்ள புத்தகங்களை படித்து, தங்களுக்கு தேவையான அறிவு திறன்களை வளர்த்திட வேண்டுமென தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், தாமிரபரணி நதி சுற்றுப்புறத் தூய்மைப் பணிக்காக திருநெல்வேலி மண்டல அண்ணா பல்கலைக்கழக முதல்வர் முனைவர் க.சக்திநாதன் அவர்களையும், சாதனைச் செல்வர் திரு.சு.அருணாச்சலம் அவர்களையும், இலக்கிய அமைப்பு நிறுவனர் திரு.நெல்லை கவிநேசன் அவர்களையும், விருதுநகர் வட்டாட்சியர் திரு.க.மாரிமுத்து ஆகியோர்களை பாராட்டி, பொன்னாடை அணிவித்து, சான்றிதழ்க மற்றும் கேடயத்தினை வழங்கினார்.

வெளியிடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.